**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 194 /2010**

**PROSECUTION WITNESS NO. 6**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : திரு. பாஸ்கர் | **Caste** : | |
| **Father's/Husband Name** | : திரு.கருப்பையா | **Religion** : | இந்து |
| **Village** | : போல்டன்புரம், 3 ஆம் தெரு, | **Calling** : | தனியார்வேலை |
| **Taluk** | : தூத்துக்குடி மாவட்டம் | **Age** : | **53 /2024** |

**(Accused 1 died. Accused 2 to 4 absent. Petition U/s. 317(1) CrPC filed and allowed.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.02.2024**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**<u>C.C.No. 194/2010 29.02.2024</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்**: 4.57

**முதல் விசாரணை**:

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தூத்துக்குடி மாவட்டம், தனியார் நிறுவனத்தில் விற்பனையாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயேஸ்குமார் என்கின்ற ராகேஷ்கிருஷ்ணா என்பவரை எனக்குத் தெரியாது. எனது மாமா கோவிந்தசாமி தஞ்சாவூரில் உள்ளஹோமியோபதி கூட்டுறவு சொசைட்டியில் மெம்பராக இருந்தார். அவர் சொசைட்டியில் நடத்தப்படும் கூட்டங்களுக்கு என்னை அழைத்துச் செல்வார். அவருக்கு வயதாகி விட்டதால் நான் அவருடன் துணையாக வந்தேன். மருத்துவக்கருத்தரங்கில் கலந்து கொள்வேன். அப்போது ஒரு விண்ணப்ப படிவமும், பாஸ்போர்ட் சைஸ் போட்டோவும் மற்றும் விலாசம் ஆகியவற்றை கூட்டுறவு சொசைட்டியில் கொடுத்தேன்.

என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. விண்ணப்பத்தில் உள்ள புகைப்படம் என்னுடையது. நான் பணம் எதுவும் செலுத்தவில்லை. நான் படிப்பதற்காக விண்ணப்பம் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.சித்ரா 1506 அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 1994 ஆம் ஆண்டு தஞ்சாவூர், ஹோமியோபதி மருத்துவர் கூட்டுறவு சங்கத்தில் துளசிதாசன் தலைவராக இருந்தார். நான் அதில் மெம்பராக சேர்ந்தேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் 2003 ஆம் ஆண்டு The Thanjavur, Electropathy Medical College ஒன்றை 1 ஆம் எதிரி துவங்கினார் என்று சொன்னால் சரியல்ல. நான் அந்தக் கல்லூரியில் BEMS என்ற 4 ½ வருட படிப்பு படிக்கலாம் என்று விண்ப்பித்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மருத்துவக்கல்லூரி சம்மந்தமாக செய்தித்தாளில் விளம்பரம் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்தமருத்துவக் கல்லூரியில் சென்னையை சேர்ந்த டாக்டர் தியாகராஜன்அவர்களால் நடத்தப்பட்டு வருவதாக தெரிந்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

செய்தித்தாளைப் பார்த்து தஞ்சாவூருக்கு போன் செய்தபோது டாக்டர் நற்பவி என்பவர் பேசினார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது துளசிதாசன் வெளியூர் சென்றிருப்பதால் மருத்துவர் பேசியதாகக் கூறினார். பின்னர் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தஞ்சாவூருக்கு வந்து துளசிதாசன் அவர்களை சந்தித்து ரூ.250/- செலுத்தி விண்ணப்பப்படிவம் பெற்று BEMS படிப்பு படிக்க விருப்பம் தெரிவித்து விண்ணப்பம் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் நான் ே◌ஹாமியோபதி மருத்துவர் சங்கம் மெம்பர் என்பதால் மேற்படி படிப்புக்கான மருத்துத்தொகையில் முன்பணமாக ரூ.5000/- செலுத்தி வருவதாகவும், மாதந்தோறும் ரூ.1000/- செலுத்தி கடைசித் தவணையில் மீதமுள்ள முழுத்தொகையையும் செலுத்தி வருவதாகவும் கூறி எழுத்து மூலமாகக் கடிதம் ஒன்று கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. துளசிதாசன் கடிதத்தை பெற்று ஒப்புக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்திய ரூ.5000/-த்திற்கு 1 ஆம் எதிரி எனக்கு ரசீது கொடுக்கவில்லை என்றும் மாதம் ஒருமுறை வகுப்பு நடத்தினார் என்றும் , வகுப்புக்கு ரூ.1000/- வீதம் 3 முறை பணம் செலுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல.

நான்ஹோமியோபதி மருத்துவர்கள், கூட்டுறவு சங்க மெம்பர் என்பதால் கடைசியில் பணம் குறைத்து கொள்வதாக சொன்னார்கள். என்று சொன்னால் சரியல்ல. கடைசியாக நான் கல்லூரி சென்றபோது கல்லூரியில் திருட்டு போய்விட்டதால் தற்காலிகமாக கல்லூரி நிறுத்தப்படுவதாகவும், கல்லூரி

ஆரம்பிக்கும்போது எனக்கு தகவல் தெரிவிப்பதாக கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் துளசிதாசன் என்பவர் 6 மாதத்திற்கு பின் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்திய பணத்திற்கு துளசிதாசன் ரசீது தரவில்லை என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.